புதுமலர்: 07 இதழ்: 04

ஆடி - ஆவணி

# அனல்

இணை ஆசிரியர்கள்

யோ. நிக்ஷன்
வே. மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.07.2010

## பொருளடக்கம்


* அனலின் குரல்
* கதையும் கற்றதும் - பிரயாசத்திற்கான பலன்
* இருதயக் கோளாறு
* நீ தேவனுடைய மனுஷனா?
* வாலிபர் வளாகம்
* குறுக்கெழுத்துப்போட்டி - 38
* நற்செய்தி - அறிவதே நித்திய ஜீவன்
* பக்தர்களின் பயிலகம்
* வினா விடை - 39
* வித்திடும் வித்தகர்கள்
* பூவரி முத்துக்கள்
* தேவனுடனான உறவுக்கான அனலின் அழைப்பு


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

*ஆசிரியர் "அனல்",*
*347 நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம். இலங்கை.*

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


---

***திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11***

# அனலின் குரல்



**கிறிஸ்துவுக்குள் அன்பான அனலின் வாசக உள்ளங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!.**

**நெய்கிறவன் எறிகின்ற நாடாவிலும் வேகமாக காலம் ஓடிக்கொண்டிருக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் வருகையின் கணங்கள் நெருங்கி வருகின்றது. அதற்கான அடையாளங்கள் வெளிப் படத்தொடங்கிவிட்டது.** "கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலே அவரோடு கூடச் செல்லத்தக்க ஆயத்தமுள்ள மணவாட்டியாய் நீ இருக்கின்றாயா?"

**இல்லையானால் உன்னை ஆயத்தப்படுத்து. நீ கிறிஸ்துவை அறியாத, ஏற்றுக் கொள்ளாத ஒருவராக இருந்தால் இன்றைக்கே அவரை உன் இரட்சகராக ஏற்றுக்கொண்டு உன்னை அவர் கரங்களில் அர்ப்பணித்துவிடு. மாறாக இயேசுவை ஏற்கனவே ஏற்றுக் கொண்டிருக்கின்றாயா? அப்படியானால் அவருக்குள்ளாக உன் வாழ்வை சீர்தூக்கி பார்த்து ஆயத்தமாகு. பரிசுத்தமான ஒரு வாழ்வு வாழ்கின்றாயா? இயேசு கிறிஸ்து சொன்னார்** "மனுஷகுமாரன் வரப்போகும் நாளை நீங்கள் அறியாதபடியால் விழித்திருங்களென்று". **எனவே மிக கவனமாக அவருடைய வருகைக்கு உங்களை ஆயத்தமாக்குங்கள்.**

**கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது;** "கர்த்தாவே வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும்..." (ஆபகூக் 3:2) **ஆம் அன்பான வாசகர்களே, உங்கள் வாழ்வில் மெய்மனதுடன் இயேசு பக்கம் திரும்பி அவருக்கு உன் வாழ்வை ஒப்புவி. அக்கணமே உயிர்ப்பிக்கும் வல்லமையுள்ள இயேசு இவ்வருடத்தின் இந் நடுப்பகுதியில் உங்களில் பெரிய மாற்றத்தை உண்டுபண்ணி உங்களை ஆயத்தமுள்ள நிலைக்கு கொண்டுவருவார்.**

— ஆசிரியர் —




## பிரயாசத்திற்கான பலன்

ஒரு வயது முதிர்ந்த தொழிலாளி தனது வேலையில் இருந்து ஓய்வு பெறத்தீர்மானித்தான். அநேக வருடங்களாக ஒரு கட்டட வேலை செய்பவரின் கீழ் இவன் பணியாற்றி வந்தான். எனவே தனது முடிவைத் தன் முதலாளியிடம் சென்று கூற முடிவெடுத்தான். அவன் தனது முதலாளியை அணுகி, தான் தனது குடும்பத்துடன் சிறிது காலத்தை சந்தோஷமாக கழிக்க ஆசைப்படுவதால் ஓய்வு பெற விரும்புவதாகவும் இவ்வளவு காலமும் தான் அவரிடம் வேலை செய்ததை பெரும் பாக்கியமாக நினைப்பதாகவும் கூறினான்.

அந்த முதலாளி இதைக் கேட்டவுடன் வேதனையடைந்தார். இவ்வளவு காலமாக தன்னோடு வேலை செய்த ஒரு நல்ல தொழிலாளி ஓய்வு பெறப்போவதையிட்டுக் கவலையடைந்த அந்த முதலாளி தனக்காக இன்னும் ஒரே ஒரு முறை மட்டும் ஒரு வீட்டைக் கட்டித்தருமாறு கேட்டார். மறுக்க முடியாமல் அந்த தொழிலாளியும் சம்மதித்தான். வேலை ஆரம்பமானது ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அந்த தொழிலாளிக்கு தனது வேலையின் மேல் நாட்டம் இருக்கவில்லை. எனவே அவன் தனது வேலையை ஏனோதானோ என்று செய்தான். தரங்குறைந்த பொருட்களை உபயோகித்தான்.

வீடு கட்டி முடிக்கப்பட்டது. அந்த முதலாளி வீட்டைப் பார்வையிட வந்தார். தனக்காக இந்த வேலையை முடித்துத் தந்ததற்காக அவனைப்பாராட்டினார். பின்பு அந்த புதிய வீட்டினுடைய சாவியை எடுத்து அவனிடம் கொடுத்து, **இதோ! இந்தச் சாவியை எடுத்துக்கொள். இந்த வீடு உனக்குத் தான் இவ்வளவு காலமாக நீ என்னோடு வேலை செய்ததற்காக நான் உனக்குத் தரும் பரிசு என்று கூறினார்.** அதிர்ந்தே போனான் அந்த தொழிலாளி. தனக்குள்ளாக வெட்கித்தலை குனிந்தான். ஆம் தான் கட்டுகின்ற வீடு தனக்குத்தான் எனத் தெரிந்திருந்தால் அவன் அதை எவ்வளவு அழகாக செய்து முடித்திருப்பான். என்ன பரிதாபமான முடிவு.

இது போலவே எமது வாழ்க்கையும் உள்ளது. ஒவ்வொரு நாளும் நாம் அதைக் கட்டி உருவாக்குகின்றோம். எமது ஒவ்வொரு செயல்களும், தெரிவுகளும் தான் எமது வாழ்க்கை என்ற வீட்டைக் கட்டுகின்றது. நாம் அதை சிறப்பாக செய்யாத போது முடிவில் அது எமக்கே தோல்வியையும் பரிதாபத்தையும் கொண்டுவரும். அந்த நேரத்தில் எமக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. நாம் கட்டி முடித்த வாழ்க்கை என்ற வீடு கட்டிமுடிக்கப்பட்டதே. இன்று எம்மை ஆராய்ந்து பார்ப்போம்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் எமது செயல்கள் எப்படி அமைகின்றன? எமது வாழ்க்கை தரமான குணவியல்புகளால் கட்டப்படுகின்றதா? அல்லது தரமற்ற குணவியல்புகளால் கட்டப்படு கின்றதா? மற்றவர்களுக்கு நன்மை தருவதாக கட்டப்படுகின்றதா? அல்லது தீமை தருவதாக கட்டப்படுகின்றதா? அதை தீர்மானிப்பது எமது கைகளில் தான் உள்ளது. விவேகத்தோடு செயற்படுவோமாக. இயேசு கிறிஸ்துவின் நிறைவான கிருபையோடு எமக்கும் மற்றவர்களுக்கும் பிரயோசனமான நல்ல வாழ்க்கைகளை அமைத்துக் கொள்வோம். தேவ கிருபை உங்களோடு இருப்பதாக.

கெ.இன்பரூபன்




## குறுக்கெழுத்துப் போட்டி - 36
## சரியான பதில் எழுதியவர்கள்

01. அ.துர்க்கா - காரைநகர்
02. அ.கம்சிகா - காரைநகர்
03. த.யதுஷன் - வலந்தலை
04. த.சிவாஜினி - வலந்தலை
05. உ.ராஜ்குமார் - வலந்தலை
06. சி.கல்யாணி - வலந்தலை
07. ச.நாகேஸ்வரி - வலந்தலை
08. தே.காந்தரூபன் - வலந்தலை
09. பா.வதனி - காரைநகர்
10. பா.கோமதி - காரைநகர்
11. பா.டிலானி - காரைநகர்
12. அ.அனுஷலா - காரைநகர்
13. பா.தர்ஷினி - காரைநகர்
14. பா.மோகனதாஸ் - காரைநகர்
15. ம.டயாளி - பாண்டவெட்டை
16. த.மதியழகன் - சுழிபுரம்
17. ம.சிவகௌரி - சுழிபுரம்
18. உ.டிரோன் - ஊர்காவற்றுறை
19. தி.உ.லகேஸ்வரி - பாண்டவெட்டை
20. ம.தேவசாந்தன் - பாண்டவெட்டை
21. தி.திருவதனி - பாண்டவெட்டை
22. க.கிறேஸ்கேத்சியான் - பள்ளிக்குடா
23. கிறிஸ்ரீனா - காரைநகர்
24. ஜெகதா - பெண்கள் சிறைச்சாலை-யாழ்.

# இருதயக் கோளாறு

அமெரிக்காவிலுள்ள மக்களை அதிகமாகக் கொல்லுகின்ற மிகப்பொதுவான சுகயீனம் என்ன? இருதயக் கோளாறு (வியாதி) வேறு எந்த வியாதியையும் விட மிகச் சிறுவயதிலேயே மரணத்தையே கொண்டு வரும் கொடிய வியாதி இது.



நம் உடல் முழுவதற்கும் இரத்தத்தைச் செலுத்துகின்ற இந்த இதயத்தில் வரும் கோளாறை விட மிகவும் கேடானதும் கொடியதுமான ஒரு நோய் இருக்கிறது. அது இவ் உலகத்தில் பிறந்த அனைத்து மனிதனுக்கும் இருக்கின்றது. அதுதான் பாவம் நிறைந்த இருதயம். *எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,........*
*(ரோமர் 3:23)*

இயேசு கிறிஸ்துவால் கண்டு அறியப்படும் பாவ நோய் இருதயத்திலிருந்தே வருகின்றது பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் இங்கிருந்தே புறப்பட்டு வரும். இவைகளே மனிதனைத் தீட்டுப்படுத்தும்.

*எல்லாவற்றையும் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது; அதை அறியத்தக்கவன் யார்?* பாவத்தினாலே மரித்துப் போயிருந்த ஒவ்வொரு மனிதனையும் தேடி இயேசு வந்தார். **ஏனென்றால் நமக்கு ஒரு புதிய இருதயத்தைத் தருவதற்காக.**

அது எப்படியாகும்? இயேசுவின் கிருபையான (சுகமாக்கும்) தொடுதல் போதும். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்காக ஒப்புக்கொடுத்ததினாலே (பாவ பலியாக்கியதனாலே) தன்னுடைய அன்பை காட்டி விட்டார்: கிருபையால் விசுவாசத்தின் மூலம் நம்மை உயிர்ப்பிக்கின்றார். இது தேவனுடைய ஈவு.

> புதிய பொருட்கள், உறவுகள், நண்பர்களைவிட மேலான ஒன்று நமக்குத் தேவை: கிறிஸ்து தரும் புதிய இருதயம்

இதை வாசிக்கும் என் அன்பு பிள்ளையே உன்னுடைய இருதயத்திலும் அவர் வாசம் பண்ண விரும்புகிறார். உன் பாவங்களை அவரிடம் (இயேசுவிடம்) அறிக்கையிடு. இனி பாவம் செய்யாதே உன் வாழ்வை அவருக்கு உகந்ததாக்கவும் உன் ஆரோக்கியம் நிலைத்திருக்கவும் செயல்படுவாயா? இயேசுவிடம் ஓர் இருதய சுத்திகரிப்பு சிகிச்சையைக் கேளுங்கள். *தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும். (சங்கீதம் 51:10)*

– ரேமா –

# நீ தேவனுடைய மனுஷனா?

உண்மையாகவே அநேக மனிதர்கள் இன்றைக்கு தவறான எண்ணம் கொண்டு தவறான தீர்மானங்களை எடுத்து தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை செய்து தேவனுடைய பிரசன்னத்தையும் வல்லமையையும் இழந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே நீ மனந்திரும்பி தேவனுடைய மனிதனாகமாறு. ஆதாமை தன்னோடு வைத்தது. தன் பிரசன்னத்தையும், ஆசீர்வாதத்தையும் கொடுக்கத் தான். அவன் அந்தப் பாக்கியத்தை இழந்தான். அது போல் தான் நாங்களும் தேவனுடைய பிரசன்னத்தை இழந்து இருக்கின்றோம். **இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்** என்றார். சகேயுவை தம்மை அறியும் அறிவின் மூலம் தன் பிள்ளையாய் மாற்றிய இயேசு உன்னையும் தம் பிள்ளையாய் மாற்ற ஆவலாயுள்ளார்.

# பரம அழைப்பை பெற்றவர்களுக்கு

தேவன் எதற்காக உங்களை அழைத்தாரோ அந்த அழைப்பை முழுமனதோடு ஏற்று உற்சாகமாய் செயலாற்றுங்கள்.

எங்கள் பழைய பாவ சுபாவங்கள் எல்லாவற்றையும் உதறிவிட்டு அதை தொடர்ந்து செய்யாமல் ஒரு புனிதமான வாழ்வை நீங்கள் உங்கள் வாழ்வில் செயற்படுத்தும் பொழுது உங்களுடைய ஊழியத்திலும் கிறிஸ்தவ பாதையிலும் உயர்ந்த காரியத்தை கர்த்தர் உங்களுக்கு வைத்திருக்கிறார்.

எனவே ஆண்டவருடைய அழைப்பை தொடரும்படி எப்பொழுதும் ஆவலாய் இருங்கள். உள்ளத்தின் விருப்பத்தோடு அவருடைய அழைப்பை நிறைவேற்றுங்கள்.

அழைப்பை நிறைவேற்றும்படி அவருக்காக எல்லாவற்றையும் இழக்க தயராயிருங்கள். அப்போது பரமஅழைப்பில் நீங்கள் நிலைத்திருப்பீர்கள். பிலிப்பியர் 3:14, 13, 12, 11.




**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!**

விசேஷமாக இயேசு கிறிஸ்துவையும் அவரது சிலுவைத் தியாகத்தையும் அறிந்து உணர்ந்த சகோதர சகோதரிகளுக்கு எழுதிக்கொள்கின்றேன்...

இந் நாட்களில் நீ உன் வாழ்க்கையை எப்படி நடத்தி வருகின்றாய். அருமையாக உனக்கு தேவன் கிருபையாய் தந்த வாலிபத்தை எப்படி செலவு செய்கின்றாய்? எதை பலனாக காண விரும்புகின்றாய்?

வாலிப வயதில் எழும்பும் எண்ணங்களுக்கும், ஆசைகளுக்கும் அளவே கிடையாது. ஆயினும் அதில் சரியானதை இனம் கண்டு கொள்ளுவது மிக கடினமான ஒன்றாகும்.

ஒரு குடும்பத்தில் குமாரன் தகப்பனை நோக்கி ஆஸ்தியில் என் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி தகப்பன் அவன் பங்கை கொடுத்தார்.

> **சொத்துக்கள் மீதும், ஐசுவரியத்தின் மீதும் அதிக நாட்டம் கொள்ளும் பருவம் இது.**

உனக்குள்ள செல்வத்தை நீ எவ்வாறு செலவு செய்கின்றாய். உக்கிராணத்துவம் உன்னில் உண்டா? இவன் சில நாட்களுக்கு பின்பு தூர தேசம் சென்று...

- **வாலிப வயது தூர தேசம் செல்ல வாஞ்சிக்கின்ற பருவம்.**

ஆராய்ந்து பார்; தேவ சித்தமில்லாத தூரப் பயணங்கள், உல்லாசமாக வாழ்வை ஓட்ட நினைக்கும் எண்ணங்கள் உன்னிலுண்டா? அவர் விரும்பாத நண்பர் கூட்டம், களியாட்டுக்கள், மனசும் மாம்சமும் விரும்பியதை செய்வது; இவற்றை தேவன் வெறுக்கிறார். தான் இருக்கும் இடத்திலே சாட்சியாக வாழ முடியாத வாலிபம் முடமான வாலிபமாகும். அனேகர் தங்கள் சொந்த கிராமத்தில், பட்டணத்தில் சாட்சியை, ஒளியை பிரகாசித்து காண்பிக்க முடியாமல்; தூர தேசம் போகவும்' அங்கு கர்த்தருக்காக பிரகாசிக்க முடியும், பிரகாசிக்கின்றோம் என்கிறார்கள். இது எப்படி?

- **துன்மார்க்க ஜீவியத்தை ஆசிக்கும் பருவம்.**

இன்பத்தையும், உணர்ச்சிகளின் விருப்பத்தையும், பொழுது போக்காக நடத்திச் செல்ல தன்னிடம் உள்ள அனைத்தையும் ஒப்படைக்கும் பருவம். நேரத்தை குறித்தும், தேவ வசனத்தின் அதிகாரத்தையும், கிறிஸ்துவின் இரத்தம் சிந்துதலையும், சபையின் அங்கம் என்பதனையும் மறந்து துன்மார்க்க ஜீவியத்துக்கும், துன்மார்க்க நண்பர்களின் ஆலோசனைக்கும் செவிசாய்க்கும் பருவம். உனது நண்பர்கள் யார்? அடிக்கடி எங்கு போகிறாய்? எதைப்பற்றி பேசுகிறாய்? எதைப்பார்க்கிறாய்? அந்தரங்க வாழ்க்கையில் துன்மார்க்கத்தையும் புதைத்து விட்டாயா?.

- **வீண் செலவு செய்யும் பருவம்.**

உனது பணப்பையிலிருக்கும் பணத்தை எப்படி கையாளுகின்றாய்? வீண் விரயமாக தேவையற்ற பொருட்களுக்கும், எப்போதும் உணவு வகைகளை உண்பதற்கும், தேவைக்கு அப்பாற்பட்ட தொலைபேசி உரையாடல்களுக்கும், குறுஞ்செய்தி (SMS) அனுப்புவதற் கும், எதிர்பாலாரோடு அதிக மணிநேரம் உரையாடி உனது ஆத்துமாவை சேதப்படுத்த இடம் கொடாதே.

எப்போதும் கண்டவுடன் ஏதாவது பொருளை உடனடியாக வாங்க தீர்மானிக்காதே. ஆழ்ந்து சிந்தனை செய்த பின் வாங்கு.

இவன் தன்னிடமுள்ள ஆஸ்தி முழுவதையும் அழித்துப் போட்டான்.

**வயிற்றை நிரப்பவும் ஆசையாயிருந்தான்.**

ஏதாவது காரியத்தை சொல்லியாவது, அல்லது செய்தாவது தப்பித்துக் கொள்ள முயற்சிக்கும் வயது. பன்றிகள் தின்கிற தவிடு கூட அவனுக்கு கிடைக்கவில்லை. எவ்வளவு கேவலமான, இழிவான நிலை. காரணம் அப்பா வீட்டின் மேலான உன்னத நிலையை அலட்சியப்படுத்தி எந்தவிதமான கனமும் கொடுக்காமல் தன் இஸ்ரப்படி வாழவிரும்பியது.

தம்பி, தங்கையரே நீ யாருடைய விருப்பத்தின்படி வாழுகிறாய். உனக்காக மரித்த இயேசுவின் சித்தத்திற்கு உன்னை ஒப்புக்கொடுத்து அவரின விருப்பத்தை மட்டும் நிறைவேற்றுவாயா?

**தகப்பனிடம் போகத்தீர்மானிக்கும் பருவம்.**

இன்றைக்கு உலகத்திலே பேசப்படும் எத்தனையோ தேவமனிதர்கள் பலர் தங்கள் வாலிப பிரயாத்தில் இயேசுவிடம் முற்றுமாய் தங்களை அர்ப்பணித்து ஜீவிக்க தீர்மானித்தவர்கள்.

*இயேசுவின் பின்னே போகத்துணிந்தேன்.*

*பின்நோக்கேன் நான் பின்நோக்கேன்*

*சிலுவை என் முன்னே உலகம் என் பின்னே*

*பின்நோக்கேன் நான் பின்நோக்கேன்*

இந்தப் பாடலை எழுதிய வாலிபன் இயேசுவை ஏற்றுக் கொண்டதன் நிமித்தம் தன் வீட்டராலும், தன் கிராமத் தாராலும் துரத்தப்பட்டு தன்னந்தனியாக ஆற்றைக் கடந்து செல்லும் போது அவன் தன் கையில் எடுத்து வந்த சில உடைகளும் ஆற்றிலே தவறவிடப்பட்டது. இப்போது மாற்றுவதற்குக்கூட உடை அற்றவனாக, யாரும் இல்லாத வனாக, தனக்காக மரித்த இந்த இயேசுவுக்காக நான் எதையும் தாங்கிக் கொள்ளுவேன். அவரை மறுதலித்து விட்டு திரும்பி போகமாட்டேன் என்ற உறுதியுடன் ஆண்டவருக்காக வாழ்ந்தான்.

### நான் பாத்திரன் அல்ல என உணரும் பருவம்

அவருடைய குமாரராக, குமாரத்திகளாக இருப்பதற்கு எமக்கு யாருக்குமே உரிமை இல்லை. ஆயினும் அவருடைய கிருபையினால் அவரது நாமத்தை விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் பிள்ளை என்கிற அதிகாரத்தை தருகிறார். (யோவான் 1:12)

***உண்மையாகவே உனது இன்றைய நிலைமை அவரது பார்வையில் எப்படி? தகப்பன் வீட்டுக்கு வந்து விட்டாயா? புதிய வஸ்திரம் தரித்துவிட்டாயா? அவர் தந்த அதிகாரம் என்னும் மோதிரத்தைக் கவனமாக வைத்துள்ளாயா? மனந்திரும்பு எப்போதும் அவரது அன்பின் தியாகமான செயலுக்காக நன்றியுள்ளவனாக(வளாக) இருப்பாயா?......***

**வேதநாயகம் சுமனன்.**

---

துன்பத்தின் பாதைதான் பரலோகத்திற்கான வழியாய் இருக்கிறது. இந்தப் பாதையில் தாகம் தீர்க்கும் அநேக கிணறுகள் உண்டு.

– ஸ்பேர்ஜன் –

---

**தேவன் பிரச்சினைகளை அனுமதித்து எம்மை பிரச்சினையிலிருந்து தப்புவிக்கிறார்.**

– ஸ்பேர்ஜன் –

---

கனி கொடுக்கும் மரம் சுத்தம் செய்யப்படும். கனி கொடுப்பதாக இருந்தால் பாடுகளைச் சந்திக்க வேண்டிவரும். கோலை ஏற்றுக் கொள்ளும் போது எதிர்காலத்தில் இன்னும் அதிக கனிகளைக் கொடுப்பீர்கள்.

– ஸ்பேர்ஜன் –

---

மார்த்தாளுடைய தவறு வேலை செய்ததல்ல, மாறாக அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கலங்கியதே தவறு. இயேசுவை மறந்து வேலையை மாத்திரம் நினைத்தாள்.

– ஸ்பேர்ஜன் –

# குறுக்கெழுத்துப்போட்டி – 38

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | | 2 | | |
| | | | 3 | | | | |
| | | | | | | | 4 |
| 5 | | | 6 | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | 8 | | | 9 |

## இடமிருந்து வலமாக

01. .......குமாரன் தாகாத்; ..........குமாரன் உரியேல்
.........குமாரன் ஊசியா:............ குமாரன் சவுல்.
நான்கு இடைவெளியிலும் வரும் ஒரு சொல்

02. இயேசு இந்த முதலாம் அற்புதத்தை கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ..........தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்.

03. ஆதியிலே இருந்தது.

05. இயேசுகிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தப்படுத்த வந்தவர்.

## வலமிருந்து இடமாக

09. ஆகானை கண்டுபிடிக்கும் படியாக கர்த்தர் குறிக்கிற வம்சம் இப்படி குடும்பமாக வரவேண்டும்.

07. ஒரு வேளை ரெபேக்காள் என்னுடனே .......... போனால் என எலியேசர் ஆபிரகாமிடம் கேட்டான். (குழம்பியுள்ளது)

## மேலிருந்து கீழாக

01. உங்களிடத்தில் இருந்து வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இவர் அப்படியே மறுபடியும் வருவார். இவர் யார்?

02. கர்த்தருடைய தூதன் புறப்பட்டு அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான்.... அவர்களெல்லாரும் செத்த பிரேதங்களாக கிடந்தார்கள். இதை இப்படியும் சொல்லலாம்.

04. இயேசு சகேயுவின் வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்று சொல்லிய அந்த நாள்.

## கீழிருந்து மேலாக

06. கொலை செய்யும்படியாக கற்களால் எறிந்த போது இவருடைய முகம் பிரகாசித்தது.

07. ஆதியிலே இவர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார்.

08. அதுமுதல் இயேசு தாம் எருசலேமுக்குப் போய் மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் ........ பாடுகள்பட்டு.

# அறிவதே நித்திய ஜீவன்

## யோவான் 17:3




உலகத்தில் நிமிடத்திற்கு நிமிடம் மனித வாழ்வின் தராதரம் உயர்ந்து கொண்டு போகும் நிலையில் விஞ்ஞானமும், பொருளாதாரமும், சமய கலாச்சாரங்களும், பாரம்பரியங்களும் தம்மை ஸ்திரப்படுத்தவும் தம் நிலையில் உள்ள அத்திபாரங்களான செயற்பாடுகளை விளம்பரப்படுத்தியும் பெரும் எண்ணிக்கையான செலவுகளையும் செய்து காணப்படாத எத்தனையோ காரியங்களுக்காய் மனிதன் தன்னையும் கூட விற்று வரும் நாட்களிலே நாம் வாழ்ந்து வருகின்றோம்.

எனவே இயேசுகிறிஸ்து என்னும் ஆண்டவர் போலியான பொருட்களிலே தங்கி புதுமை செய்கிறவர் அல்ல. அவர் கிரியை செய்யும் உண்மைத் தெய்வம். "அவரை உண்மையாய் அறிந்தவரால் தான் அறிவிக்க முடியும்". அவரை அறிவதற்காக எத்தனை வழிமுறைகளைக் கையாண்டாலும் அதில் வந்து அவர் கிரியை செய்வார்.

பிரபல நடிகர் ஒருவர் இருந்தார். இனிய குரலில் அழகாகப் பேசுவார். சத்தத்தை உயர்த்தியோ, தாழ்த்தியோ, பொருளுக்கேற்ப கவர்ச்சிகரமாகப் பேசுவார்.

ஒருநாள் ஒரு தனவானுடைய வீட்டில் ஒரு பெரும் வைபவம் நடைபெற்றது. ஏராளமான விருந்தாளிகள் வந்திருந்தனர். இந்த நடிகரும் வந்திருந்தார்.

வைபவத்தின் நிகழ்ச்சிகளில் அந்த நடிகருக்கும் ஒரு பங்கு கொடுக்க யாவரும் விரும்பினர். அவரும் அதற்குச் சம்மதித்தார்.

அவர் முறை வந்த போது, மேடைக்கு வந்தார். "எந்தக் கட்டத்தை அபிநய நடிப்புடன் நான் சொல்ல விரும்புகிறீர்கள்?" என்று கேட்டார்.சற்று நேர அமைதிக்கு பின் ஒரு குருவானவர் எழும்பி, 23ஆம் சங்கீதத்தைச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்.

வேதப்பகுதி ஒன்றைச் சொல்லுவார்களென்று நடிகர் எதிர்பார்க்க வில்லை. சில வினாடிகள் தயக்கத்துடன் காட்சியளித்தார். பின் குருவான

வரை நோக்கி: நல்லது, கவர்ச்சிகரமாக அதை ஒப்பிக்க என்னால் கூடும்; ஆயினும் ஒரு நிபந்தனை: நான் ஒப்பித்தபின் நீரும் அதை ஒப்பிக்க வேண்டும் என்றார்.

குருவானவரும் இப்படி ஒரு நிபந்தனையை எதிர்பார்க்கவில்லை. அவர் நடிகரை நோக்கி: "உம்முடைய நடிப்புத் திறமையில் ஒரு சிறிய பகுதி அளவு கூட என்னிடம் கிடையாது. ஆயினும் அப்படி ஒரு நிபந்தனையை நீர் விதிப்பதாயிருந்தால் உமக்குப்பின் நானும் அதை ஒப்பிப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை" என்றார்.

நடிகர் முதலாவது அதை மனப்பாடமாக அபிநயத்துடன் ஒப்பிக்க ஆரம்பித்தார். ஆஹா! எவ்வளவு இனிமை! கம்பீரமான குரல்; பொருத்தமான அபிநயம்: விருந்தாளிகள் அப்படியே லயித்துவிட்டனர். நடிகர் ஒப்பித்து முடிந்ததும், பலத்த கரகோஷம்: வானைப்பிளக்கும் ஆரவாம்: ஏகப்பாராட்டு.

பின் குருவானவரின் முறை: ஒப்புக்கொண்டபடி அவரும் மேடைக்கு வந்தார். தமது பாணியிலே ஒப்பிக்க ஆரம்பித்தார். நடிகரின் சிறப்புகள், குருவானவரின் ஒப்பித்தலில் இல்லை. குறைந்த இனிமை, கரகோஷம் இல்லை, ஆரவாரம் இல்லை, பாராட்டு இல்லை. ஆனால்.....?

ஒரே நிசப்தம்; தலை குனிந்த நிலை, ஆறாய் பெருகின கண்கள்; அத்தனை கவர்ச்சியா? இல்லை, அத்தனை இதய உணர்ச்சி; உணர்ச்சி வசத்தால் கண்ணீர். அதைச் சிந்தாத கண் ஒன்று கூட அங்கு இல்லை.

சில வினாடிகள் அமைதிக்குப்பின்; நடிகர் மீண்டும் மேடைக்கு வந்தார். சில வார்த்தைகள் பேச விரும்பினார். மிகுந்த உணர்ச்சி வசத்தால், அவரால் கூட வழக்கம் போல பேசமுடியவில்லை. தளதளக்கும் குரலில்: "நண்பர்களே, எனது திறமையால் உங்கள் கண்களைக் கவர்ந்தேன், உங்கள் செவிகளையும் கவர்ந்தேன். இவரோ உங்களுடைய உள்ளங் களையே தொட்டுவிட்டார். எங்கள் இருவரின் ஒப்பதலிலும் ஒரு பெரும் வித்தியாசம்! நான் இந்த மேய்ப்பர் சங்கீதத்தை மாத்திரம் அறிந்தவனா யிருக்கின்றேன். அவரோ அந்த சங்கீதத்தின் மேய்ப்பரையே அறிந்த வராயிருக்கிறார்!" என்றார்.

**ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பின வராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் (யோவான் 17:3)**

**அருமையான நண்பரே இயேசு என்பவரை நீ அறிந்திருக் கலாம். ஆனால் உன் வாழ்வால் அவரை நீ அறிந்து விட்டால் அது நித்திய வழி ஆகும்.**

தேவன் தாமே உங்களை ஆசிர்வதிப்பாராக.




## பிசாசு மனிதனுக்குள் வரும் வழிகள்

### 01. பாவம்

இச்சை, அதிகாரத்துக்கு கீழ்ப்படிய மறுப்பது, மன்னிக்க மறுப்பது போன்றவை **இருக்கும் போது அசுத்த ஆவி வர வாசலை திறக்கின்றோம்.** நாம் கொடூரம் உள்ளவர்களாக இருக்கவிரும்பினால் கொடுமையின் ஆவி வர அனுமதிக்கின்றோம்.

### 02. தியானம்

***கிறிஸ்தவத்தின் தியானம் எம் சிந்தையை இயேசுவின் வார்த்தையால் நிரப்புவது.*** ஆனால் கிறிஸ்துவை, அவருடைய வசனங்களை குறித்ததல்லாத தியானம் மனதை ஒரு வெறுமையான நிலைக்கு கொண்டு வரும். ***இது மனதை பிசாசு நிரப்ப இடம் கொடுக்கின்றது.***

### 03. இடமாற்றம்

மந்திரவாதிகள் தங்கள் உடலில் உள்ள ஆவி தங்கள் பிள்ளைகளை ஆட்கொள்ளும் படி கேட்பார்கள். இதனால் அந்த பிள்ளைகளில் அந்த ஆவி தொற்றிக்கொள்ளுகிறது.

### 04. பிரதிஷ்டை மூலம்

சிறுபிள்ளைகளை தேவனல்லாத தேவர்களுக்கு பிரதிஷ்டை செய்வதன் மூலம். **லேவி 17:7, உபா 32:17, சங்கீதம் 106:37,38.**

### 05. சடங்கு

***சில சடங்குகளில் பங்கு கொள்வோர் தங்களை மறந்த ஒரு நிலைக்குள் போவார்கள்.*** அப்போது தங்கள் உடலை வேதனைப்படுத்தும் படியாக முட்களையெல்லாம் குத்துவார்கள். ஆனால் அவர்களுக்கு நோகாது.

## 06. செய்கை மூலம்

சில வகையான **நடனத்தில் தொடர்ச்சியான சில அபிநயங்கள் மூலம் பிசாசை வந்து சரீரத்தை ஆட்கொள்ளக்கேட்பது**. இது ஆபிரிக்க நாட்டில் அதிகம். **பெரிய நாட்டில் எல்லாம் இப்படி நடக்கிறது**. சில நாடுகளில் Madigras என்ற வைபவம் நடத்துவார்கள். **இதில் பங்கு கொள்பவர்களின் உடலுக்குள் இச்சையின் ஆவி உட்செல்லுமாம்.**

## 07. சிந்தனையின் மூலம்

தவறான சிந்தனைகளுக்கு இடம்கொடுப்பது பிசாசு வர வாசலை திறப்பது போன்றது. **உதாரணம் யூதாஸ். கடைசி இராப்போஜனம் வரையும் தீய எண்ணம் உள்ளவனாக இருந்தான்.** இது அவன் இருதயத்துக்குள் பிசாசு போக வாசலைத் திறந்தது. **அனனியா சப்பீராள் பொய்க்கு இடம் கொடுத்தனர்.** இதனால் பிசாசு அவர்கள் இருதயத்தை நிரப்ப இடம்கொடுத்தனர்.

■ ■ ■ ■ ■

## பிசாசுகளைத் துரத்துதல்

**பிசாசுகள் கட்டளையின் வார்த்தையினால் (**Word of Command**) சரீரத்தை விட்டுப் போகின்றது**. லூக்கா 4:35, 36 கட்டளை கொடுக்க அதிகாரமும் வல்லமையும் தேவை. **இயேசு கொடுத்த இந்தக் கட்டளையில் அதிகாரமும் வல்லமையும் காணப்பட்டது**. இதனால் ஜனங்கள் ஆச்சரியப் பட்டனர். **இது என்ன வார்த்தை?** இயேசு கட்டளை கொடுத்தார். பிசாசுகள் கீழ்ப்படிந்தன. ஏன்? **கட்டளையின் பின்னால் உள்ள அதிகாரத்தையும் வல்லமையையும் கண்டதினால் தான்.**

நாம் பரிசுத்த ஆவியானவரினால் நிரப்பப்படும் போது இந்த வல்லமையை பெறுகின்றோம். லூக்கா 24:49. **தரிப்பிக்கப்படுதல் என்பது வல்லமையினால் மூடப்படுதல்.** அப்போஸ்தலர் 1:8 **பரிசுத்த ஆவியான வரினால் இந்த வல்லமை இன்று சபைக்குள் வந்திருக்கின்றது. லூக்கா 10:19** "இயேசுவின் நாமம்" இயேசுவின் சார்பில் பாவிக்க விசுவாசிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. **இயேசுவின் நாமத்திற்கு பிசாசுகள் கீழ்ப்படிய வேண்டும்.** சில சந்தர்ப்பங்களில் கட்டளைக்கு பிசாசு எதிர்த்து நிற்கும். **நாமும் இயேசுவின் நாமத்தில் எதிர்த்து நின்றால் அது போய்விடும்.** சில பிடிவாதமுள்ள பிசாசுகளும் உண்டு. **அவை உபவாச ஜெபத்தினால் தான் போகும். மத்தேயு 17:21.**

தொடரும்.....

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் இன்பரூபன்)

# வினா விடை – 40

× 01. நான் கர்த்தருடைய ஆலயத்திற்கு போகிறேன் என்றது யார்?

02. தேவனுடைய ஆலயம் அதின் ஸ்தானத்திலே கட்டப்பட வேண்டும் என்றது யார்? கோரேஸ்ராஜா

03. "அவன் மேன்மையுள்ளவனாய் இருந்ததினால் அல்லவோ அவர்களில் தலைவனான்" அவன் யார்? அபிசாய்

✓ (04) ஜெபத்தில் ஸ்தோத்திரப் பாட்டை தொடங்கும் தலைவன் யார்? மீகாவின் மகன் மத்தனியா

× 05. நீங்கள் நலமானதைச் செய்யும்படி விண்ணப்பம் பண்ணுகிறேன் என்றது யார்? பவுல்

× 06. " அவன் தேவனுடைய சிநேகிதன் எனப்பட்டான்" அவன் யார்? ஆபிரகாம்

× 07. ஒரே வசனத்தில் **சமாதானம்** என்று மூன்று முறை வருகிற வசனம் எது? I சாமு 25:6

(08) எஸ்தரின் மறுபெயர் என்ன? அத்சாள்

2017 09. ரோமர் நிருபத்தை எழுத அப்போஸ்தலனாகிய பவுலுக்கு உதவியாக இருந்தது யார்? தெர்தியு


× 10. நாய்கள் யாருடைய பருக்களை நக்கியது? லாசரு

---

## வினாவிடை – 39 சரியான விடை எழுதியவர்கள்

01. அ.கம்சிகா – காரைநகர்
02. அ.துர்க்கா – காரைநகர்
03. அ.எஸ்தர் – காரைநகர்
04. த.யதுஷன் – வலந்தலை
05. த.சிவாஜினி – வலந்தலை
06. உ.ராஜகுமார் – வலந்தலை
07. சி.கல்யாணி – வலந்தலை
08. ச.நாகேஸ்வரி – வலந்தலை
09. தே.காந்தரூபன் – வலந்தலை
10. உ.கிரிஜா – வலந்தலை
11. சு.தயாளன் – காரைநகர்
12. பா.வதனி – காரைநகர்
13. பா.கோமதி – காரைநகர்
14. பா.டிலானி – காரைநகர்
15. அ.அனுஷலா – காரைநகர்
16. பா.தர்ஷினி – காரைநகர்
17. பா.மோகனதாஸ் – காரைநகர்
18. ம.டயானி – பாண்டவெட்டை
19. த.மதியழகன் – பாண்டவெட்டி
20. ம.சிவகௌரி – பாண்டவெட்டை
21. கிறிஸ்ரீன் – காரைநகர்
22. சூ.ஜான்சி – நாவற்குழி
23. அ.ஏஞ்சலின் – நாவற்குழி
24 லோ.நெகேமியா – நாவற்குழி
25. லோ.பென்கனன் – நாவற்குழி





# வித்திடும் வித்தகர்கள்

## ஹட்சன் டெய்லர்

தொடர்ச்சி...

## மற்றுமோர் மிஷன்

ஸ்காட்லாந்தில் உள்ள விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி காணப்படவேண்டும் இதற்காக ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அந்த மாநாட்டில் சீனாவைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் பேச ஹட்சன் டெய்லர் கூட்டத்தின் தலைவர்களிடமிருந்து மிகவும் கஷ்டப்பட்டு அனுமதி பெற்றுக்கொண்டார்.

யாருக்கும் தெரியாத இந்த ஹட்சன் டெய்லரை கூட்டத்தின் தலைவர் பார்த்து, ஒரு வேளை நீர் இக் கூட்டத்தின் நோக்கத்தை மறந்துபோய்விட்டீர் போலும் என்று குறிப்பிட்டார். ஆனால் ஹட்சன் டெய்லரோ இக் கூட்டம்தான் சீனாவைப்பற்றி எடுத்துக்கூறுவதற்கு ஏற்ற இடம் என்று தனக்குள்ளே தீர்மானித்த வராய், ***பல நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருக்கும் அக் கூட்டத்தின் முன் நடுக்கத்தோடு, ஆனால் தேவனை நம்பினவராய் எழுந்து நின்று பேச ஆரம்பித்தார். பேசுவதற்கு முன் ஜெபித்தார். அந்த ஜெபமே எல்லாரையும் அசைத்துவிட்டது.***

எங்கும் ஒரே அமைதி...; அவர் பேச ஆரம்பித்தார். சில காலம் இங்கிலாந் தில் வசித்து தன் பெயரைப் பீட்டர் என்று மாற்றிய சீன நாட்டவர் ஒருவர் தன் நாட்டிற்கு என்னுடன் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவர் திடீரென்று கப்பலின் மேல் தட்டிலிருந்து தவறி கீழே விழுந்துவிட்டார். அவரைக் காணாமையால் பக்கத்திலிருந்த படகோட்டியிடம் அவர் எங்கே என்றேன். அவர் கீழே விழுந்து விட்டார் என்றான். உடனே நான் அவனிடம் தயவு செய்து மீன் பிடிக்கும் வலையை வீசி அவனைக் காப்பாற்றமாட்டாயா? என்று கெஞ்சினேன். அவன் கொஞ்சமும் இரக்கமற்றவனாக நாங்கள் மீன்களைப் பிடித்துக் கொண்டி ருக்கின்றோம் என்றான். தயவு செய்து உதவி செய்.... என்றேன். அவன் அப்படியானால் நீ எத்தனை டாலர் கொடுப்பாய் என்றான். நான் என்னிட மிருக்கும் எல்லாம் தருகின்றேன் என்றேன். எவ்வளவு? என்றான். 5டொலர் கள் என்றேன். அது போதாது 30டொலர்கள் தரவேண்டும்

என்றான். இறுதியில் 14டொலர்களுக்குச் சம்மதித்தான். சம்மதித்தபின் வலையை வீசி பீட்டரை மேலே இழுத்துக் கொண்டு வந்தான். நான் எவ்வளவோ முதலுதவி செய்தும் அவன் பிழைக்கவில்லை. அவன் உயிர் பிரிந்துவிட்டது. எத்தனை நன்னலம்! எத்தனை இரக்கமற்ற தன்மை எதிர்பாரா இச் செய்தியால் எல்லாரும் மௌனமாயினர்.

நாம் அந்த மீனவனைக் குற்றம் சாட்டுகின்றோம். ஆனால் பல்லாயிரக்கணக்கில் ஆத்துமாக்கள் அழிந்து கொண்டிருக்கும் சீனாவைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. ***நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்*** என்று சொன்னவரின் வார்த்தைப் படி அவர்களை மரணத்திலிருந்து விலக்கி நித்தியத்திற்கு நேராக நடத்தாவிட்டால் **நம் கிரியைகளுக்கு நம்மிடத்தில் கணக்கு கேட்கமாட்டாரா?** இயேசு கிறிஸ்துவினால் மீட்கப்பட்டு நித்திய ஜீவனைப் பெற்ற நாங்கள் பல்வேறு காரியங்களில் ஈடுபடுகின்றோம். அந்த மக்களைப் பற்றி கொஞ்சமேனும் நினைப்பதேயில்லை. இப்படியாக ஹட்சன் சீன தேசத்தின் உண்மையான நிலையை எடுத்துக்கூறி, கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றும் சொன்னார்.

ஸ்கொட்லந்தில் வாழும் நான்கு மில்லியன் ஜனங்களுக்கு நற்செய்தி சொல்ல பல ஆயிரக்கணக்கானோர் இருக்கின்றனர். இந்தத் தொகையைவிட கிட்டத்தட்ட நூறு மடங்கு அதிக மக்களைக் கொண்ட சீனாவில் நான்கு மில்லியன் ஜனங்களுக்கு ஒருவர் வீதமாவது சென்று நற்செய்தி அறிவிப்பது அவசியமானதல்லவோ: இத்தனை பயங்கரமான செயல்கள், அறிவீனங்கள், அங்கலாய்ப்புக்கள்..... இந்த ஜனங்களுக்கு **நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்** என்ற பரலோகத்திற்கு கொண்டு செல்லும் ஒரே வழியான இயேசு தேவையில்லையோ? ஏன் அவர்கள் தங்கள் வாழ்வை அந்தகாரத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டும்.

தொடரும்.....

## வினாவிடை - 38
## சரியான பதில்கள்

01. தாவீது - சங்கீதம் 9:1
02. திரியாவரக்காரரின் - யோபு 5:13
03. யாக்கோபு - ஆதியாகமம் 49:6
04. தானியேல் தரிசனத்தில் கண்ட ஆட்டுக்கடா - தானி 8:4
05. ரூபன் - ஆதியாகமம் 49:3
06. கேனியன் - எண்ணாகமம் 24:21
07. சிம்சோன் - நியாயா. 15:13
08. ஞானிகளின் வாக்கியம் - பிரசங்கி 12:11
09. ஆசாப் - சங்கீதம் 77:15
10. யோதாம் - 2நாளாகமம் 27:1-2

# மூவரி

உயிரை மடித்து
சுவிசேஷத்தால் மறைத்தவர்
மிசனரிகள்

**மு**

மணல் குதிரையில்
ஏறி கடலில் இறங்கியோர்
சுயநலவாதிகள்

நம்மை வருடிக்
கொல்வது
பாவம்

**த்**

ஊமைகள் பேசும்
இடம்
சிலுவை மறைவே

நாம் உடைபடுவது
புதிய தோற்றம்
பெறவே

**து**

நினைப்பதை
நடத்துவது
நித்திய தேவன்

பாவிகளின்
உயிர்காப்புப் படகு
சபை

**க்**

கலங்கும் கண்களுக்கு
பதில்
எழுப்புதலே

கரும் குளிரிலும்
உறையாதது
மனது

**க**

தேவனின் பிள்ளையின்
பிரசங்
உன்னையான வேலையாள்

**ள்**

# தேவனுடனான உறவுக்கான அனலின் அழைப்பு...

## மனந்திரும்பிய வாழ்க்கை

லூக்கா 19:1-9 சகேயுவைக் குறித்ததான அறிமுகம் இங்கேதான் கொடுக்கப்படுகின்றது. அத்தோடு இவனுடைய முழு வாழ்க்கையின் மாற்றமும் இந்தக் குறுகிய வசனப்பகுதிக்குள்ளாய் கூறப்பட்டுள்ளது. அவன் சரியான ஒரு மாற்றத்தைப் பெற்றுக்கொண்டான்.

இவரைக் குறித்ததான ஒரு மேலோட்டமான அறிமுகம் எப்படி வருகின்றது என்பதனை லூக்கா 19:2 வசனத்தில் காணலாம். ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு எனப்பட்ட ஒரு மனுஷன். நாங்கள் வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்கின்ற போது இந்த இரண்டு தகுதிகளும் மற்ற எல்லாத்தகுதிகளைப் பார்க்கிலும் இவனிடத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றதாய் இருந்திருக்க வேண்டும். ஆனால் இந்த இரண்டு தகுதிகளும் சகேயுவை எந்த விதத்திலும் பரலோகத்திற்கு கொண்டு செல்லாது. ஏனென்றால் ஆண்டவர் சொன்னார் ஐசுவரியவான் பரலோக ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது இலகுவாயிருக்கும். நாம் ஊசியின் காது என்று கூறுகின்ற போது அது பெரிய கதவிலே உள்ள சிறிய கதவைத்தான் ஊசியின் காது என்று சொல்லுவார்கள். உதாரணமாக ஒட்டகம் அதற்குள்ளாகப் போய்விடும் ஆனால் ஐசுவரியவான் பரலோக ராஜ்ஜியத்திற்குள் போகமுடியாது என்று இயேசு சொல்லுகின்றார்.

சகேயு பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதற்குரிய தகுதி அவனிடத்தில் இல்லை. இங்கே நாங்கள் சகேயுவைப் பார்த்தால் ஜனக் கூட்டங்கள் இயேசுவை சூழ்ந்து வருகின்றது. வருகின்ற போது சகேயுவிற்கு ஒரு எண்ணம் நான் ஒரு தடவையாவது இயேசுவைப் பார்க்க வேண்டும். இயேசுவைப் பற்றி அந்த நாட்களிலே கதைத்திருப்பார்கள். இவர்தான் மரித்தோரை உயிரோடு எழுப்புகின்றவர், அற்புதங்களைச் செய்கின்றவர் ஆகவே அவரைக் காண சகேயுவுக்கு ஒரு ஆசை ஏற்பட்டிருக்கும். எனவே அவன் என்ன செய்கின்றான், இவரைப்பார்த்தால் மட்டும் போதும். ஆனால் அவரைப் பின்தொடருகின்ற ஜனங்களோடு செல்லுவதற்கு சகேயு விரும்பவில்லை. நான் ஒரு தடவை அவரைப்பார்க்க வேண்டும். பார்த்ததன்

பிற்பாடு நான் என்னுடைய பழைய வாழ்க்கையை வாழவேண்டும் என்பதுதான் அவனுடைய நோக்கமாக இருந்திருக்கலாம். ஆனால் இங்கே என்ன நடந்தது? இயேசு வந்து அண்ணாந்து பார்த்து *சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா* என்றார். அந்த நேரத்திலே சகேயுவினுடைய வாழ்க்கையின் மாற்றம் ஆரம்பமாகின்றது.

மனந்திரும்புதல் என்றால்: ஒருவர் ஒரு திசையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார். தான் செல்கின்ற அந்தத் திசை தவறானது என்று தெரிகின்ற போது அந்தத் திசையைவிட்டு அதற்கு சரி எதிராக திரும்புவது அது தான் மனந்திரும்புதலுக்குரிய வரைவிலக்கணம். அல்லது ஒரு புதிய இருதயத்தைப் பெற்றுக்கொள்வது தான் மனந்திரும்புதல். நாங்கள் எல்லோரும் மனந்திருப்பியிருக்கின்றோம். எங்களுக்கு ஒரு புதிய இருதயம் இருக்கின்றது. அப்படியென்றால் முன்பு கல்லாக இருந்த எங்களுடைய இருதயம் தற்பொழுது சதையாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். **மனந்திரும்பினால் ஒரு புதிய இருதயம் கிடைக்கும்.** புதிய இருதயத்தை தேவன் எங்களுக்குள்ளே சிருஷ்டிக்கின்றார்.

உண்மையான மனந்திரும்புதல் உள்ள மனிதன் இயேசுவினுடைய சுபாவத்தைப் பிரதிபலிப்பான்.

உண்மையான **மனந்திரும்புதல் உள்ள மனிதன் இயேசுவினுடைய சுபாவத்தைப் பிரதிபலிப்பான்.** சகேயுவுக்கும் இயேசுவுக்கும் இடையில் நடந்த இந்தச் சம்பாசனையின் நேரத்தைப் பார்க்கின்ற போது அது நாட்கணக்கான நேரம் அல்ல. அது ஒரு குறுகிய நேரம். ஆனால் இந்தக் குறுகிய நேரத்திலே சகேயுவினுடைய மனந்திரும்புதல் பூரணமானதாக இருந்தது. சிலவேளைகளிலே நாங்கள் இரட்சிக்கப்பட்டு நிறைய நாட்கள், நிறைய ஆண்டுகளாக கூட இருக்கலாம். ஆனால் மனந்திரும்புதலில் திருப்தி காணாமல் விட்டுவிடவேண்டியதை விட்டுவிடாமல் போராடித்தவித்துக் கொண்டிருக்கலாம்.

சகேயுவின் உடனடியான மனந்திரும்புதல் இயேசு அவனுடைய வீட்டிற்கு போவதற்கும், வாழ்க்கை மாறுவதற்கும் காரணமாக இருந்தது.

அவனுடைய வாழ்க்கையிலே ஒரு கொஞ்ச நேரத்துக்குள்ளாய் சரியான மனந்திரும்புதல் வந்தது. இயேசு அந்த இடத்திலே வந்து அண்ணாந்து பார்த்து அவனைக்கண்டு **சகேயுவே சீக்கிரமாய் இறங்கி வா, இன்றைக்கு நான் உன் வீட்டில் தங்க வேண்டும்** என்றார். இது இயேசுவினுடைய அழைப்பு. இயேசு இறங்கி வா என்று சொன்னவுடனே சகேயு **சீக்கிரமாய்** இறங்கினான் என்று வேதாகமத்திலே கூறப்பட்டுள்ளது. **லூக்கா 19:6 அவன் சீக்கிரமாய் இறங்கி சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டு போனான்.** சகேயு மரத்தின் மேலே இருந்தான். அவன் இயேசுவின் சத்தத்தைக் கேட்டவுடன் உடனடியாகவே கீழே இறங்கி வந்தான். *சரீஎதிரே திரும்பினான்.* இது அவனுடைய உள்ளான மாற்றத்தின் வெளிப்பாடாய் இருக்கலாம்.

மனந்திரும்பியவர்களுடைய வீட்டிலே இயேசு இருப்பார்.

மனந்திரும்புகிறதற்கு நாங்கள் காலம் தாழ்த்தினால் அதனாலே எமக்கு பாரதூரமான விளைவுகள் நிச்சயம் ஏற்படும். *சகேயுவின் உடனடியான*

*மனந்திரும்புதலினால் இயேசு அவனுடைய வீட்டிற்குப் போவதற்கும், அவனுடைய வாழ்க்கை மாறுவதற்கும் காரணமாக இருந்தது.*

உங்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் காண கர்த்தர் விரும்புகின்றார். உங்களோடு சேர்ந்து உங்கள் வீட்டிற்கு வருவதற்கு இயேசு ஆவலாக இருக்கின்றார். **மனந்திரும்பியவர்களுடைய வீட்டிலே இயேசு இருப்பார்.** சிலவேளை உங்கள் வாழ்க்கையில் இந்த அனுபவம் இல்லாவிட்டால் இன்றைக்கு கதறிக்கேளுங்கள். ஆண்டவரே இன்றைக்கு என் வீட்டுக்கு நீர் வரவேண்டும். சிலவேளை இயேசு எங்கள் வீட்டுக்கு வரமுடியாமல் இருப்பதற்கு காரணம் எங்களுடைய மனந்திரும்புதலற்ற நிலமையாகும்.

*அப்போஸ்தலர் 16:31 ❚ அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப் படுவீர்கள் என்று சொல்லி ❚.* இயேசு சொல்லுகின்றார்: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது. ஏன் வீட்டிற்கு இரட்சிப்பு வரவேண்டும்? **ஒருவருடைய உண்மையான மனந்திரும்புதல் அந்த வீட்டிலே தாக்கத்தை ஏற்படுத்தும்.** ஒருவருடைய சரியான மனந்திரும்புதல் அந்த வீட்டிலே தேவனுக்கான விசுவாசத்தை உடையவர்களை உருவாக்கும். நீங்கள் சிலவேளை யோசிக்கலாம் நான் தேவனை அறிந்து அநேக நாட்களாகிவிட்டதே: ஆனால் எனது குடும்பத்தில் இன்னும் அனேகர் இரட்சிக்கப்படவில்லையே என்பதாக. அது தேவனுடைய ஒரு சித்தமாய் இருந்தால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் எங்களுடைய மனந்திரும்புதலின் பக்கம் தவறு இருந்தால் நாங்கள் எங்களுடைய மனந்திரும்புதலைப் புதுப்பிக்க வேண்டும். இன்னொருவருடைய இரட்சிப்புக்கு எங்களுடைய மனந்திரும்புதலற்ற நிலை தடையாக இருக்கக் கூடாது.

இறங்கி வந்த சகேயு சொல்லுகின்றார்: **ஆண்டவரே நான் என்னுடைய ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கின்றேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகின்றேன்** என்றான்.

**உண்மையான மனந்திரும்புதல் மற்றவர்களை மகிழ்விக்கும்.**

ஆண்டவர் எதையுமே அவனிடத்தில் கேட்கவில்லை. சகேயுவே இறங்கி வா என்று இயேசு சொன்னவுடனே அந்தக் கணத்திலேயே அவன் மனந்திரும்பிவிட்டான். இங்கே நாங்கள் பார்க்கின்ற போது நான் கொடுக்கின்றேன் என்று சொல்லுகின்றான். **இது தான் மனந்திரும்புதலின் கனி.** மனந்திரும்பியிருந்தால் அதன் கனி தெரியவேண்டும். சகேயுவினுடைய மனந்திரும்புதலினால் மற்றவர்களுக்கு ஆசீர்வாதம் வந்தது. அவன் தன் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்கு கொடுக்கின்றான். நிச்சயம் ஏழைகள் இதனால் மகிழ்ந்திருப்பார்கள். **உண்மையான மனந்திரும்புதல் மற்றவர்களை மகிழ்விக்கும்.**

அடுத்து சகேயு சொல்லுகின்றார்: **நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாக திருப்பிச் செலுத்துகின்றேன்** என்றான். அவனுடைய மனந்திரும்புதலின் கனிதான் இந்த மாற்றங்கள். நீங்கள் மனந்திரும்பி அந்த மனந்திரும்புதலின் கனி உங்களுடைய வாழ்வில் இல்லாமையைக் கொண்டு வந்தாலும், குறைவைக் கொண்டு வந்தாலும் நீங்கள் மனந்திரும்புதலின் கனியைக் கொடுத்தேயாக வேண்டும்.

**லூக்கா 19:9 இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது, இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாயிருக்கின்றானே.** ஆபிரகாம் யார்? விசுவாசத்தின் தந்தை, அவன் ஐசுவரியமுள்ள ஒரு சீமான். ஆபிரகாம் யாருக்குப் பிரியமாய் இருந்தான். ஆபிரகாம் தேவனை வேதனைப் படுத்துகின்ற காரியத்தை செய்யவில்லை. இந்த ஆபிரகாமின் குமாரன் என்கிறதான பாக்கியம் சகேயுவிற்கு கிடைக்கின்றது. தான் தவறான முறையில் சம்பாதித்தவை எல்லாவற்றையும் மனந்திரும்பிய போது திரும்பக் கொடுக்கின்றான். ஆண்டவருக்குப் பிரியமில்லாத நிலையிலிருந்து ஆண்டவருக்குப் பிரியமான ஒரு நிலைக்குள்ளாக வந்தான். அவன் தன் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்தான். எங்களுடைய மனந்திரும்புதல் இயேசு விரும்புகின்ற அந்த தரத்திற்கு எங்களைக் கொண்டு வந்திருக்கின்றதா? நாங்கள் அனேக நாட்கள் ஆண்டவரை அறிந்து எங்களுடைய மனந்திரும்புதல் கர்த்தர் விரும்புகின்ற நிலைக்கு எங்களை மாற்றியிருக்கின்றதா? ஒரு குறுகிய நேரத்திற்குள்ளாய் சகேயுவினுடைய வாழ்க்கையிலே முழுமையான மாற்றம் ஏற்பட்டது. இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் இழந்து போகிறவர்களுக்கு ஒரு நாளும் குறைவு உண்டாகாது.

**எல்லாமிருந்தும் இயேசு இல்லாவிட்டால் ஒன்றுமில்லை. ஒன்றும் இல்லாமல் இருந்தும் இயேசு இருந்தால் எல்லாம் உண்டு.**

பிரியமானவர்களே நாங்கள் இந்தப் பூமியிலே எதனை இழந்தாலும் ஆண்டவரை இழக்கக் கூடாது. ஏனென்றால் எல்லாமிருந்தும் ஆண்டவர் இல்லாவிட்டால் ஒன்றுமில்லை. ஒன்றும் இல்லாமல் இருந்தும் இயேசு இருந்தால் எல்லாம் உண்டு. ஏனென்றால் இயேசுவுக்குள்ளே சகல சம்பூரணமும் உண்டு. உங்கள் வாழ்க்கையிலே நீங்கள் எதிர்பாராத இழப்புக்கள், குறைவுகள் வரலாம். அப்படி ஏற்பட்டாலும் அதனால் நீங்கள் இயேசுவை இழந்துவிடாதபடிக்கு பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அவரை இழக்காமல் அவரைப் பற்றிக்கொண்டிருந்தால் அவர் தான் நித்தியத்திற்குரிய ஆசீர்வாதத்தை எங்களுக்குத் தரவல்லவர். நீங்கள் ஒரு போதும் சோர்ந்து போகாமல் தேவனோடு உள்ள அந்த உறவை சரிபடுத்திக் கொண்டே இருங்கள். அதை சரியாக நாங்கள் காத்துக் கொண்டால் நாம் பரலோகத்திற்குள் செல்லமுடியும்.

தேவனுக்கும் எங்களுக்கும் இடையில் உள்ள உறவில் ஏதாவது கீறல் விழுந்திருக்கின்றதா? நாங்கள் செய்கின்ற சில காரியங்களை மேலோட்டமாகப் பார்க்கின்ற போது கீறல் போல இருக்கும். ஆனால் அது எமது வாழ்வையே கெடுத்து விடும். உதாரணமாக நாம் வெள்ளி ஈயம் பூசப்பட்ட ஒரு பேணியில் சாதாரண ஒரு கீறு கீறிவிட்டு சொற்ப


நாட்களின் பின் அவதானிக்கும் போது அந்தக் கீறல் விழுந்த இடத்திலே துருப்பிடித்துக் காணப்படும். நாளடைவில் அந்தத் துரு அந்தப் பேணி முழுவதும் கெட்டுப்போவதற்கு காரணமாக அமைந்துவிடும்.

சில வேளைகளில் எங்களுடைய பரிசுத்தமான வாழ்க்கையில் ஒரு கீறலை நாங்கள் அனுமதித்துவிட்டால் அது பிற்பாடு ஒரு பெரிதான தாக்கத்தை எங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் ஏற்படுத்திவிடும். தேவனுக்கும் எங்களுக்கும் இடையில் உள்ள உறவில் கீறல் விழுந்து விடுவதற்கு நாங்கள் அனுமதிக்கக் கூடாது. பாவத்தின் பின் விளைவு பெரியதாக இருக்கும். எங்கள் ஆத்துமாவைக் கெட்டுப்போகப்பண்ணிவிடும். எங்களுடைய மனந்திரும்புதல் சரியானதாக இருக்கட்டும். சகேயுவினுடைய மனந்திரும்புதல் சரியானதாக இருந்தது. இயேசு அவனுடைய வீட்டிற்குச் சென்றார். நாங்கள் இரட்சிக்கப்பட்டால் வீட்டிலுள்ளவர்கள் ஆண்டவரை அறியவேண்டும். நாங்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படுகின்ற அந்த நிலை உண்மையிலே எங்கள் குடும்பத்தில் தேவனுக்கு பிரியமான ஒரு மாற்றத்தை உண்டாக்க வேண்டும். எங்களுடைய மனந்திரும்புதலின் கனியைக் கண்டு இயேசுவை ஏற்றுக்கொள்ளாத வர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் ஒருவர் மாத்திரம் இரட்சிக்கப்பட்டு ஆலயத்திற்கு வருகின்றீர்களா? உங்களுடைய குடும்பத்தில் இன்னொருவர் ஆண்டவருக்குள்ளாக வரவில்லை என்றால் அவர்களுடைய காரியங்களை நீங்கள் உடனடியாக எதிர்க்க வேண்டாம். நீங்கள் அப்படி எதிர்த்தால் இரண்டு வாரத்தில் மனந்திரும்ப வேண்டியவர்கள் இரண்டு வருடம் சென்றாலும் மனந்திரும்பமாட்டார்கள். நாங்கள் செய்ய வேண்டியது எங்களுடைய மனந்திரும்புதலின் கனியைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். இந்தக் கனியைக் கண்டு அதனை அனுபவித்து ஒரு நாள் அவர்கள் இயேசுவிடம் வருவார்கள்.

சகேயுவினுடைய மனமாற்றத்தினாலே, அவனுக்கு மாற்றம் ஏற்பட்டது. அதனாலே அவனுடைய குடும்பத்திற்கும் மாற்றம் ஏற்பட்டது. எனவே உண்மையான மனமாற்றம் அடைகின்ற போது அதனாலே உங்களுடைய குடும்பத்தினரையும் கர்த்தருக்காக ஆதாயப்படுத்திக் கொள்ள முடியும்.

நீங்கள் ஆண்டவரை விட்டுத்தூரம் போயிருக்கலாம், உங்கள் மனந்திரும்புதலை மறந்து போயிருக்கலாம். இன்று தேவன் பக்கமாய் திரும்புங்கள். சிலவேளை இன்றைக்கு தான் நீங்கள் முதல் தடவையாக ஆண்டவரை அறிந்து கொண்டிருக்கலாம். உங்களை ஆண்டவர் நேசிக்கின்றார். சகேயுவை அழைத்த தேவன் உங்களையும் அழைக்கின்றார். சகேயுவினுடைய வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும்படியாய் கிரியை செய்த இயேசு உங்களையும் நேசிக்கின்றார். உங்களுடைய வாழ்வையும் மாற்ற அவர் ஆயத்தமுள்ளவராய் இருக்கின்றார்.

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்திலே வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். இப்படிச் சொன்ன ஒரே ஒருவரென்றால் அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தான். வருத்தப்பட்டு பாரம்சுமக்கின்ற உங்களையும் அழைக்கின்றார். உங்களுடைய இருயத்தை மாற்றி ஒரு புதிய இருதயத்தைத் தருவதற்கு அந்த இயேசு ஆவலுள்ளவராய் இருக்கின்றார். நீங்கள் நிறைவான மனதோடு உங்களை விட்டுக்கொடுங்கள். கர்த்தருடைய மற்றத்தைக் கண்டு கொள்ளுங்கள். மனம்மாறிய அந்த நிலையிலிருந்து இனி ஒரு நாளும் தவறாதபடி உறுதியாயிருங்கள். நிச்சயமாய் நீங்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று ஆண்டவருடைய பரலோகத்தின் பிள்ளைகளாக மாறுவீர்கள்.



போதகர்: வேதநாயகம் மகாராஜா

## குறுக்கெழுத்துப் போட்டி – 37
## சரியான பதில்கள்

### *இடமிருந்து வலமாக*

01. அனலாயிருங்கள்

03. மேஷாக்

### *வலமிருந்து இடமாக*

04. இயேசுவுக்கு

09. இரக்கம்

10. சிப்போரா

### *மேலிருந்து கீழாக*

02. லாமேக்கு

03. மேகம் போன்ற

05. சுவர்

### *கீழிருந்து மேலாக*

06. சாவு

08. கடைசீ

**ஒரு விசுவாசி தேவனுடைய குடும்பத்திற்குள் தத்தெடுக்கப்படும் போது பழைய ஆதாமுடனுள்ள தொடர்பும், நியாயப்பிரமாணத்துக்கு அடிமைப்பட்ட நிலையும் உடனேயே நீக்கப்படுகின்றது. அத்துடன் புதிய உடன்படிக்கைக்குள்ளும், புதிய சட்டத்திற்குள்ளும் வருகின்றார்.**

**– ஸ்பேர்ஜன்**

## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத் துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர் களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

## சந்தா கூப்பன்

பெயர் :-..............................................

விலாசம் :-..............................................

..............................................

..............................................

..............................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

**Zion Church Office,**

**No. 347, Navalar Road,**

**Jaffna, Sirlanka.**

To:..............................







TO:

MISS. MATHANA GNANACHCHANDRAN,
ALVAI EAST,
ALVAI,
MADATHTHADY.